

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குன்றத்தூர் நகராட்சியில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை பயனாளிகளுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, குன்றத்தூர் நகர மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி, வட்டச் செயலாளர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் 139வது வட்டம் ஜாபர் கான்பேட்டை, கங்கையம்மன் கோயில் சென்னை உயர்நிலைப் பள்ளியில் 10–ஆம் வகுப்பில் 400–க்கு மேல் மதிப்பெண் பெற்ற மற்றும் 350–க்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவ–மாணவிகளுக்கு தலைமை பொதுக் குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமையில், பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் தங்க நாணயமும், ஆறுதல் பரிசு தலா ரூ.2000 ரொக்கமாகவும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார். சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், மின்னல் கந்தப்பன், வழக்கறிஞர் ப.சுப்பிரமணியன், எம்.எஸ்.ஹரிபாபு, தா.மோகன் குமார், த.சம்பத், ஆர்.ரமேஷ், வி.பி.ஜானகிராமன், சை.மு.சேகர், அட்கோ கமலநாதன், எஸ்.பி.கோதண்டம், ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், கோட்டூர் பிரகாஷ், ஜி.கே.ராமச்சந்திரன், டி.என்.சிவமணி, கு.புகழ்வேந்தன், பொன் ஜெய்சிங், மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ்.முருகன், சாந்தி சுந்தரம், அ.அயாத் பாஷா, இ.வரதன், மா.ஏழுமலை, பூபதி வெங்கடேசன், பி.எஸ்.பிரகாஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். நன்றியுரை: பாபு எல்லப்பன்.

## ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் ஆலோசனை!

# 39(அ) வட்ட கழக (பி.எல்.ஏ2) (பி.எல்.சி) (பிடிஏ) ஆலோசனைக் கூட்டம்!

## தா.வ.மு.கஜேந்திரன் அறிக்கை!

*சென்னை, ஜூலை25*

*39(அ) வட்ட கழக நிர்வாகிகள் (பி.எல்.ஏ2) (பிஎல்சி) (பிடிஏ) பாக முகவர்கள் பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது. இதுகுறித்து வட்டச் செயலாளர் தா.வ.மு.கஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :*

*சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 39(அ) வட்டத்தில் (பி.எல்.ஏ2) (பிஎல்சி) (பிடிஏ) பாக முகவர்கள் பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் இன்று (25.07.2025 வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் தனுஷ் கோடி இல்லத்தில் நெ. 223/67 திருவொற்றியூர் நெடுச்சாலை புது வண்ணையில் நடைபெறுகிறது.*

*இக்கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன், ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்.*

*வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், இளைஞர் அணி பாக அமைப்பாளர்கள் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் தா.வ.மு. கஜேந்திரன் அறிக்கையில் கூறியுள்ளார்.*





திருவள்ளூர் தொகுதி பூண்டி மேற்கு ஒன்றியம் கைவண்டூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன், வேளாண் இணை இயக்குனர் பால்ராஜ், வட்டாட்சியர் ( பொறுப்பு ) பரமசிவம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுலோச்சனா, வட்டார மருத்துவ அலுவலர் மரு. இராமச்சந்திரன், வேளாண் துணை இயக்குனர் இளையராஜா, பல்வேறு துறைகள் சார்ந்த அலுவலர்கள், கழக நிர்வாகிகள் வி.எஸ்.நேதாஜி, டி. மோதிலால், ஒன்றிய கழக நிர்வாகிகள் கே. பாஸ்கரன், அ.ஆனந்தன், இ லட்சுமணன், சித்ரா ரமேஷ், தா. நடராசன், எம். சௌக்கர்பாண்டியன், கோ.டில்லிபாபு, பி.தேவேந்திரன், சிவசங்கரி உதயகுமார் ரெஜினா மோசஸ், காஞ்சிப்பாடி பி.சரவணன், உஷா முருகன், ராஜாசிங், சி.எஸ்.விஜயகுமார், டேவிட், பிரசன்னகுமார், ரகு, கௌதமன், மணிவண்ணன், அருள் செல்வம், ஆர்.அருள்செல்வம், பிரேமானந்த், விவேகானந்தன், ராஜதுரை உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.

## சைதையில் கழகத் தலைவர் தொடங்கி வைத்த முரசொலி வாசகர் வட்டம் – முதல் கருத்தரங்கம்!

# “இந்திய அரசியல் அரங்கில் திராவிட இயக்கத்தின் உரிமைக்குரல்!” கருத்தரங்கம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன்– சுப.வீரபாண்டியன் சிறப்புரை!

*சென்னை, ஜூலை 25 -*

*கழகத்தின் உரிமைப் போர் முரசம் முரசொலி ஏட்டின் வாசகர் வட்டத்தை, சென்னையில் கடந்த 02-06-2025இல் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஏற்பாட்டில் கலைஞர் அரங்கில் தொடங்கி வைத்து வாழ்த்தினார்கள்.*

*அதன் முதல் நிகழ்ச்சியாக இன்று (25-07-2025) மாலை 5.30 மணியளவில் சைதை, பஜார் சாலை, கலைஞர் அரங்கில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் தொடக்க உரையாற்ற, பேரா.சுப. வீரபாண்டியன் இந்திய அரசியல் அரங்கில் திராவிட இயக்கத்தின் உரிமைக் குரல்!” எனும் தலைப்பில், சிறப்புரையாற்றிட உள்ளார்.*

*இதில் கழகத் தோழர்கள், திராவிடரியக்கப் பற்று கொண்ட இளையோர்கள் கூட்டத்தில் பெருமளவு பங்கேற்று கருத்து விளக்கம் பெற்றிட வாரீர் என அன்புடன் அழைக்கிறோம்! என வாசகர் வட்ட மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் தடா ஒ.சுந்தரம் கேட்டுக் கொண்டுள்ளார்.*



தாம்பரத்தில் உள்ள வள்ளுவர் குருகுலம் அரசு உதவி பெறும் பள்ளியில் வரும் ஆகஸ்ட் 5ம் தேதி காலை உணவு திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் வந்து துவக்கி வைக்க உள்ள நிலையில் சம்பந்தப்பட்ட பள்ளியில் தாம்பரம் மாநகர செயலாளர்,தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ.,அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.உடன் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, மாநகராட்சி ஆணையர் சீ.பாலச்சந்தர், துணை மேயர் கோ.காமராஜ், மாநகராட்சி உயர் அலுவலர்கள், மற்றும் பள்ளி ஆசிரியர்கள் உடன் இருந்தனர்.


